
தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 10 டிசம்பர் 2009 கனி 1

# ஆசிரியர் கடிதம்...

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துதலை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வருடம் முழுவதும் தேவன் நம்மை வழிநடத்திவந்தமைக்காக அவரை ஸ்தோத்தரிக்கிறோம். 2010-ம் வருடத்தில் நாம் செய்யவேண்டிய பணிகள் ஏராளம்! அதில் உங்களுடைய பங்கு என்ன? இன்றே அதைக்குறித்து திட்டமிடுங்கள்.

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழ் வெளிவர ஒவ்வொரு மாதமும் அநேக ஆயிரங்கள் செலவாகிறது. இவ்விதழ் வெளிவர ஒரு சில பரிசுத்தவான்கள் உதவியாக இருக்கிறார்கள். தற்போது 2500 வாசகர் நமது மாத இதழை பெற்றுவருகிறார்கள். சந்தா கொடுக்க இயலாத 10 வாசகர்களுக்கு நீங்கள் இவ்விதழை வாங்கிக்கொடுத்து அவர்களும் சத்தியத்தை அறியஉதவிடலாமே. இந்த அரிய தருணத்தை நழுவவிடாதீர்கள்.

நம் தேசத்தில் கிறிஸ்துவின் வசனம் விதைக்கப்படவும், வாசகர்கள் பெருகிடவும், யாவரும் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவும் ஜெபிக்கிறோம்.

அன்புடன்,
ஆசிரியர்.




**கிறிஸ்துவின் வசனம்**

ஒலிக்கும்

தொலைக்காட்சி நிகழ்ச்சி



தமிழன் TV யில் திங்கள் காலை 6.00-6.15
இமயம் TV யில் புதன் காலை 6.30-6.45

*ரேடியோ நிகழ்ச்சி*

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை



கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**Website: www.thewordofchristindia.com**




"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 10 டிசம்பர் - 2009 கனி - 1


ஆசிரியருரை

## சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள்



### Love the Truth and Peace

சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் என யூத மக்களுக்கு சேனைகளின் கர்த்தர் சொல்லியிருந்தார் என்று சகரியா 8:19-ல் வாசிக்கிறோம். இன்று சத்தியத்தையும் சமாதானத்தையும் தேடுகிற தேவஜனமே நீங்கள் எதை சிநேகிக்கிறீர்கள்? உலகத்தையா, உலகத்திலுள்ளவைகளையா, "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என்று 1யோவா.2:15-ல் படிக்கிறோம். ஆனாலும் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலுமே அதிகமான ஜனங்கள் அன்பு உள்ளவர்களாக இருக்கின்றார்கள். உலகம் அந்த அளவு அவர்களை பற்றிக்கொண்டிருக்கிறது. என்னசெய்வது உலகத்தில் தானே இருக்கிறோம் என்று சொல்லுவார்கள். இச்செய்தியை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே நீ முதலாவது சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகிக்க கற்றுக்கொள். அப்பொழுது சத்தியபரராகிய ஆண்டவர் இயேசுகிறிஸ்து உம்மோடு இருப்பார்.

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறதை நாம் யோவா.14:6-ல் வாசிக்கிறோம். அவரே உலகத்தின் வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவுமிருக்கிறார். இன்றைக்கு வழிதெரியாமல் திரிகின்ற ஆட்டைப்போல, அநேகர் வழிதவறிபோய்கொண்டிருக்கிறார்கள். இயேசு உலகத்தின் வழியாகவும், சத்தியமாகவுமிருக்கிறார். அவருடைய பிறப்பு முதல் அவருடைய சிலுவை மரணம் வரை நாம் அவரைக்குறித்து பரிசுத்தவேதாகமத்தில், குறிப்பாக புதியஏற்பாட்டில் உள்ள நான்கு சுவிசேஷபுத்தகத்தில் வாசிக்கிறோம். அநேகருடைய பாவத்தைப் போக்கும் பழுதற்ற ஆட்டுக்குட்டியாக கடந்துவந்தார்.

உலகத்தில் எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள் பின்பு மரித்தார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. ஆனால் உன்னதமான கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் மேலானவர். அவர் பாவமில்லாதவராயும், பரிசுத்தமுள்ளவராயும் சகலஜனங்களையும் சத்தியத்தில் வழிநடத்தும் சத்தியபரராயிருந்தார். ஆகையால், யோவான் அவரைக்குறித்துச் சொல்லும்போது "அந்தவார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" என்று குறிப்பிடுகிறார் (யோவா.1:14). அந்த சத்தியபரரை நீ சிநேகிக்கின்றாயா?

ஆண்டவருடைய ஊழியத்தில் சந்திக்கப்பட்ட பேதுரு மூன்றரைவருட காலங்கள் இயேசுவோடு உண்டு உறங்கி, சென்ற இடங்களிலெல்லாம் ஆண்டவருடைய சத்தியத்தை கேட்டு கற்று வளர்ந்தவன். மீன்பிடித்துக் கொண்டிருந்த அவனை மனிதர்களை பிடிக்க கர்த்தர் தெரிந்துகொண்டார். அவனையும் அவனோடு இருந்த பதினொரு சீஷர்களையும் இயேசு அதிகமாக நேசித்தார். ஆகையால் அவர்களைப் பார்த்து சொல்லும்போது; "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்றார் (யோவா.15:15). இப்படி ஒரு சிநேகிதனோடு பழகுவதுபோல கர்த்தர் தம்முடைய சீஷர்களோடு இருந்தார். அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பேதுரு; ஆண்டவர் தன்னை எதற்காக தெரிந்துகொண்டாரோ அக்காரியத்தை விட்டுவிட்டு, மீண்டும் நான் மீன்பிடிக்கப்போகிறேன் என்னோடு வருகிறீர்களா என்று மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு சென்றான். ஆனால் அவனுடைய பிரயாசத்தின் பலன், ஒன்றும் அகப்படவில்லை. வருத்தத்தோடு இருந்த அவர்களைப் பார்த்த கர்த்தர், நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால் அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்.

அதன்பின்பு "இயேசு சீமோன்பேதுருவை நேக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்" (யோவா.21:15). பேதுருவை குறித்து படிக்கும்போது அவன் காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்று சொன்னவன். அந்தசமயத்தில் ஆண்டவர் அவனை நோக்கி: இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய்

என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அந்தப்படியே அவன் ஆண்டவரை மறுதலித்து, பின்பு அவர் சொன்னதை நினைவுகூர்ந்து மனங்கசந்து அழுதான். இதையெல்லாம் அறிந்தபேதுரு, மூன்றாந்தரம் அவர் தன்னை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்;" (யோவா.21:17). நாம் ஆண்டவரை நேகிக்கிறோமா அல்லது உலகத்தையும் உலகத்தில் உள்ளவைகளையும் நேசிக்கிறோமா என்பதை ஆண்டவர் இயேசு அறிவார். ஆகையால் இதை நன்கு அறிந்த பேதுரு எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றான். ஆம், அன்பான தேவ ஜனமே இயேசு எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். அவர் உன்னையும் உன் காரியங்களையும் அறிவார். நீ அவரை நேசிக்கிறாயா? அவர் சொல்லுகிறார்; "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று (யோவா.14:15). அவரிடத்தில் அன்பாயிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதிருந்தால் நாம் பொய்யர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள்ளிராது.

மேலும், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்கிறார் (யோவா.14:23). எத்தனை ஆசீர்வாதமான காரியம் என்று பார்த்தீர்களா? நாம் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளும்போது நம்மை சிருஷ்டித்த பிதா அன்பாயிருக்கிறார். ஒன்றாயிருக்கிற தெய்வீகமே நம்மோடு இருக்கும். சத்தியமும் சமாதானமும் நம்மோடு வாசம்பண்ணினால் எத்தனை ஆசீர்வாதமான காரியம்! இப்பேர்பட்ட ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாக வேண்டுமானால் நாம் செய்யவேண்டியது சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகிக்கவேண்டும். எனக்கு சத்தியம் வேண்டாம், சமாதானமும் வேண்டாம் என் நண்பர்கள் போதும், என்னுடைய உறவினர்கள் போதும், எனக்கு இருக்கும் சம்பத்துக்கள் போதும், என்பிள்ளைகள் போதும், நான் வளர்க்கிற நன்றியுள்ள நாய்போதும் என்னை நேகிக்க என்று சொல்வீர்களானால், ஒரு நாளில் ஏமாற்றப்படுவீர்கள். சத்தியம் என்றும் உங்களை நேசிக்கும். "உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" (யாக்.4:4). நீங்கள் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்கப்போகிறீர்களா? அல்லது தேவனுக்கு பகைஞனாயிருக்கப் போகிறீர்களா? இன்றே தீர்மானம்செய்யுங்கள்.

சகலமும் கற்ற ஞானி சாலொமோன் சொல்லுகிறார்; "என் மகனே, நீ உன் சிநேகிதனுக்காகப் பிணைப்பட்டு, அந்நியனுக்குக் கையடித்துக்

கொடுத்தாயானால், நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய். இப்பொழுது என் மகனே, உன் சிநேகிதனுடைய கையில் அகப்பட்டுக்கொண்டபடியால், நீ உன்னைத் தப்புவித்துக்கொள்ள ஒன்று செய். உன் கண்ணுக்கு நித்திரையும், உன் கண்ணிமைக்குத் தூக்கமும் வரவிடாமல், உன் சிநேகிதனிடத்தில் போய், உன்னைத் தாழ்த்தி, அவனை வருந்திக் கேட்டுக்கொள். வெளிமான் வேட்டைக்காரன் கைக்கும், குருவி வேடன் கைக்கும் தப்புவதுபோல, நீ உன்னைத் தப்பிவித்துக்கொள்வாய்" என்று மிக அழகாக நேர்த்தியாக ஆவியானவருடைய உதவியோடு எழுதிவைத்திருக்கிறார் (நீதி.6:1-5). நீங்கள் சத்தியபரராகிய இயேசுவையும் அவருடைய வசனத்தையும் சிநேகிப்பீர்களானால், அவர் உங்களை சிநேகிப்பார், ஆபத்து காலத்தில் உதவிசெய்வார், வியாதியாய் இருக்கும்போது வைத்தியராயிருப்பார். காவலில் அடைபட்டு கிடந்தால் உங்களை விடுதலையாக்குவார். சத்தியத்தை கச்சையாக நீங்கள் போட்டுக்கொண்டால் காலமெல்லாம் உங்களைக் காக்கும் காவலாளியாயிருப்பார். சத்தியம் இன்றும் ஜீவிக்கிறது. சத்தியத்தை ஒருவரும் அழித்துவிடமுடியாது. யாக்கோபு தன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில சேருவார்கள்" என்று ஆதி.49:10-ல் சொல்லப்பட்டபடி சமாதான கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்வரை நியாயப்பிரமாணம் ஜனங்களை வழிநடத்தியது. "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" என்று யோவா.1:17-ல் படிக்கிறோம். நீங்கள் இந்த உண்மையைப் புரிந்துகொண்டீர்களா?

"தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்" (சங்.101:6). நீங்கள் எந்த தேசத்தில் வாழ்ந்தாலும் உண்மையாய் வாழவேண்டும் அதுவே முக்கியம். அநேகர் உலகத்திற்கு ஒத்தாற்போல வேஷம்போடுகிறார்கள். "அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப்பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்" என வேதம் மிகத்தெளிவாய்போதிக்கிறது 1யோவா.4:5-ம் வசனம். சத்தியத்தை நேசிக்கிற நீங்கள் அப்படியல்ல; "பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" (1யோவா.4:4). ஆம், நம்மில் இருக்கிறவர் பெரியவர். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ளதேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு. அவர் பூமியிலே சமாதான வார்த்தைகளை கூறி "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்றார்

(மத்.5:9). இந்த சமாதானத்தை நீங்கள் சிநேகிப்பீர்களானால் நீங்கள் தேவனுடைய புத்திரராயிருப்பீர்கள்.

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்று இயேசு சொல்லுகிறார். அவருடைய பிறப்பின்போது பரமசேனையின் திரள்தோன்றி; "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" என்று லூக்.2:14-ல் வாசிக்கிறோம். ஆண்டவர் பூமியிலே சமாதான கர்த்தராக வெளிப்பட்டார். ஆகையினாலே உயிர்த்தெழுந்த பின்பு தம்முடைய சீஷர்களை வாழ்த்தும்போது உங்களுக்கு சமாதானம் என்றார். பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது; "தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்" என்கிறார் (1கொரி.14:33).

இச்செய்தியை வாசிக்கிற அன்பு வாசகரே, சகோதரனே, சகோதரியே நீ சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகித்து உன் ஆவி ஆத்தும சரீரத்தை பாதுகாத்துக்கொள். அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## நடப்புச் செய்திகள்




- *தமிழ் பாடத்தை தமிழ் மொழியில் மட்டுமே நடத்த வேண்டும். பிறமொழி சொற்களை பயன்படுத்தக்கூடாது என்று பள்ளி கல்வித்துறை கூறியுள்ளது.*
- *ஆங்கிலம் பேசுவதில் இந்தியாவை மிஞ்சியது சீனா.*
- *ஒரு செல்போன் நிறுவனத்தின் சேவை திருப்தியளிக்கவில்லை என்றால், செல்போன் எண்ணை மாற்றாமலே ரூ.19 மட்டுமே செலுத்தி வேறு நிறுவணத்தின் சேவையைப் பெறமுடியும். இந்த வசதி டிசம்பர் 31 முதல் நடைமுறைக்கு வரும் என டிராய் அறிவித்துள்ளது.*
- *இந்தியாவின் அதிநவீன போர் விமானமான சுகோய்-30 போர் விமானத்தில் 74 வயதான ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் பறந்து போர் விமானத்தில் பறந்த முதல் பெண் என்ற பெருமையை பெற்றார்.*
- *சச்சின் டெண்டுல்கர் சாதனைக்கு ஆர்வம் மற்றும் துல்லியமான பார்வைத்திறனே காரணம் என இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக் குழு தலைவர் ஸ்ரீ காந்த் பேசியுள்ளார்.*

# ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை உண்டு?

## Why There is Power in the Blood of Christ?

*J.C.Choate*



இரத்தத்தைப் பற்றி சில ஜனங்களுக்கு நல்ல அபிப்ராயம் இருக்காது. இது துண்டிக்கப்படுதல், காயம் அல்லது மரணத்தைக் கூட சுட்டிக்காண்பிக்கலாம். மத உலகில் சிலர் தங்களுடைய அகராதியில் இரத்தம் என்ற அந்த வார்த்தையை நீக்கிவிட முயற்சிக்கின்றனர்.

பழைய ஏற்பாட்டின் காலங்களில் தேவன் மிருகபலிகள் அல்லது இரத்த பலிகளை மனிதனுடைய பாவத்திற்கு நிவாரணமாகக் கேட்டார். இரத்தம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் இரத்தத்தில் ஜீவனிருப்பதால் இது ஜீவனைக் குறிக்கிறது. இந்தக் காரணத்திற்காக, இரத்தம் சாப்பிடுதல் தவறென விலக்கப்பட்டிருக்கிறது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம்; உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்கவேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" (லேவி.17:11,12) என வாசிக்கிறோம். பழைய உடன்படிக்கையுங்கூட இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டது. "எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப் போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின் மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி.9:19-22) என்று எபிரெய ஆசிரியர் சொல்கிறார். மேலும் எபிரெய ஆசிரியர், பிரதான ஆசாரியர் வருஷத்திற்கொரு முறை இரத்தத்தோடே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, "...... அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்" (எபி.9:7).

அதன்பின் எபிரெய எழுத்தர் "அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே" என முடிக்கிறார் (எபி.10:4).

மிருகங்களின் பலிகள் சிறந்த ஆடாகவும், குற்றமற்றதாக அல்லது ஊனமற்றதாகவும் இருந்தபோதிலும் அவைகள் அசைவற்றவைகள், ஆனால் மிருகங்கள். ஆனபடியினால் ஒரு குற்றமற்ற பலி தேவைப் பட்டது. மிருகங்களின் இரத்தம் அந்த குற்றமற்ற பலியின் இரத்தத்தை மாதிரியாக காண்பித்தது. ஆனால் மிருகங்கள் பாவத்தை நிவர்த்தி செய்யமுடியாதபடியினாலும், மனிதன் தாமே பாவியாக இருந்தபடியினால், தன்னையும் மற்றவர்களையும் இரட்சிக்க முடியாதபடியினாலும், அதன்பின் அந்த குற்றமற்ற பலியாக யார் தன்னை அர்ப்பணிக்க முடியும்? ஆனால் ஒருவர் இருந்தார், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அவர். அவர் பாவஞ் செய்யவில்லை என்று பேதுரு கூறுகிறார் (1பேது.2:2). ஏனென்றால் அவர் பாவமற்றவராய் வாழ்ந்தார், நியாயப்பிரமாணத்தைக் குற்றமற கைக்கொண்டவராக, சோதனைக்கு இணங்காதவராக, அதன்பின் அவர் உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையின் மேல் மரிக்க தகுதியுடையவராக இருந்தார்.

கிறிஸ்துவின் இரத்தத்தை வலியுறுத்திக் கூறுகிற சில பாடல்களை நாம் பாடுகிறோம். "இரத்தத்தில் வல்லமையுண்டு" என்ற ஒரு பாடலை நாம் பாடுகிறோம். இன்னொன்று, "எது என்னுடைய பாவத்தைக் கழுவ முடியும்? இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றும் இல்லை" என்கிறது. அந்த வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவைகள்!

இரட்சிக்கக் கூடாத அநேகக் காரியங்கள் உள்ளன. ஏற்கனவே குறிப்பிட்ட, மிருகங்களின் இரத்தம் நம்மை இரட்சிக்காது. நியாயப்பிரமாணம்கூட நம்மை இரட்சிக்காது. அவை ஜனங்களை கிறிஸ்துவினிடத்தில் மட்டுமே கொண்டுவந்து சேர்க்கிறது. பவுல், "அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய் பாவத்தின்கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" (கலா.3:22-25). நியாயப்பிரமாணத்தின் கிரியையினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பது மட்டுமல்ல, நம்முடைய சுயக் கிரியைகளினாலும் நாம் இரட்சிக்கப்படமுடியாது. இதைக்குறித்து பவுல், "ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிற

வர்களும், பலவிதஇச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும், ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத் தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களு மாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் தமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்த பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்" (தீத்.3:3-7) என்கிறான்.

பேதுரு நாம் வெள்ளி மற்றும் பொன்னினாலான பொருட்களினால் நாம் மீட்கப்பட்டு அல்லது இரட்சிக்கப்பட்டவர்களாய் இருக்கவில்லை என நமக்குப் போதிக்கிறான் அவன் கூறுவதை கவனியுங்கள், " உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது.1:18,19) என்கிறான். மனிதன் இவ்வாழ்வின் மூலம் தனக்கு வேண்டியவற்றை வாங்கவோ அல்லது லஞ்சம் கொடுக்கவோ இயலும் ஆனால் அவன் இரட்சிப்பை வாங்கமுடியாது. தான் இரட்சிக்கப்படும்பொருட்டு கர்த்தருக்கு அவன் லஞ்சம் கொடுக்கவும் முடியாது. ஆனபடியினால் நாம் அழிவுள்ள பொருட்களின் மேல் நம்பிக்கை வைக்காமல் ஞானமுள்ளவர்களாய் நடப்போம். கடைசியாக, மனித மதங்களும், கோட்பாடுகளுக்குக் கீழ்ப்படிதலும், மற்றும் மனுஷருடைய கட்டளைகளும் ஒருவனை பரலோகம் கொண்டு செல்லாது. கிறிஸ்து, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.......... என்றார்" (மத்.15:9). மேலும் பவுல் கூறும்போது பிரிவினைகளை உண்டாக்குகிறவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யவில்லை என்கிறான் (ரோம.16:17,18).

பாவிகளாய் இருக்கையில், நாம் இரட்சிப்படும்படிக்கு ஒரே ஒரு வழி மாத்திரமே உண்டு, அது தம்முடைய இரத்தத்தைச் சிந்திய கிறிஸ்துவின் தியாகத்தின் மூலமே ஆகும். வேதவாக்கியங்களில் கிறிஸ்துவின் இரத்தத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்ற பல கூற்றுகள் உள்ளன. பவுல் இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனோடு ஒப்புரவாக்கப் பட்டிருக்கிறோம் அல்லது நாம் தேவனின் சிநேகிதர்களாக மாறுவதற்கு தகுதியடைந்திருக்கிறோம் என்றான். அவன், "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர்

சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ள வைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ.1:19,20) என்கிறான். பவுல் எபேசு கிறிஸ்தவர்களுக்கு, முன்னே தூரமாயிருந்த அவர்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானார்கள் என்றான். யூதர்களையும் புறஜாதியாரையும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கி தம்முடைய மரணத்தினாலே பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, அதாவது அவர்களைப் பிரித்துவைத் திருந்த பழைய பிரமாணத்தை நீக்கினார் என்று விளக்குகிறான்.

கிறிஸ்துவையும் அவருடைய இரத்தத்தையும் பற்றி பேசுகையில், பவுல் எபேசு கிறிஸ்தவர்களுக்கு, "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே.1:) என்று எழுதினான். கொலோசெய சபை கிறிஸ்தவர்களுக்கு, (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ.1:14) என்றான். கிறிஸ்து கர்த்தருடைய பந்தியை ஆரம்பிக்கையில், இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மத்.26:28) என்றான். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறவர்கள் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டுள்ளனர் (அப்.2:47). மேலும் எபேசுவில் சபை மூப்பர்களுக்கும் பவுல் கூறினபோது, "உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்.20:28) என்றான்.

கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்தும், அது எதற்காக சிந்தப்பட்டது என்பது குறித்தும், அதிலுள்ள வல்லமையைக் குறித்தும் அதிகமாகக் கூற முடிந்தது. ஆனால் வேதவாக்கியங்களின் மூலம் ஏற்கனவே நாம் வாசித்திருக்கிறவற்றின் சாராம்சத்தைக் காண்போமாக.

1. கிறிஸ்து குற்றமற்ற பலியாக, மனிதனுடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தி சிலுவையின் மேல் மரித்தார்.

2. கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதின் மூலம், பழைய பிரமாணம் நீக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தினாலே புதிய உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது.

3. நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கீழ்ப்படிதல் மூலம் அந்த இரத்தத்தினிடத்தில் வந்து சேருகிறோம். வேறு வார்த்தையில், ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து, தன் பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரே தேவனுடைய குமாரன் என

அறிக்கையிட்டு, இரட்சிக்கப்படும்படிக்கு அல்லது பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் (தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு) பெற வேண்டும் என கிறிஸ்து அறிவித்தார் (மாற்.16:16; அப்.2:38). ஒருவன், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம், தண்ணீர் முழுக்கினால் கிறிஸ்துவின் இரத்தத்தோடு ஐக்கியப்படுகிறான், கர்த்தருடைய மரணத்தின் பலனை அடைகிறான். இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்களற கழுவப்படுதலாகும். இதை ரோமர் 6-ல் வாசிக்கிறோம். மேலும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள் எனச் சொல்லப்பட்டபோது, பவுல் எழுந்து, பிறகு அவன் ஒரு விசுவாசியாக மாறி, தன் பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தரை ஏற்றுக்கொண்டு அதன் பின் அவன் தன்னுடைய பாவங்கள் கழுவப்பட்டது என்று உறுதிப்படுத்தப்பட்டான். இதன் சரியான வசனத்தை நாம் வாசிக்கலாம், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்" (அப்.22:16). பின்பு, அப்போஸ்தலர்2:38-ல் பேதுரு திரளான ஜனங்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் அவனுடைய வார்த்தையைக் கேட்டு அவ்வாறே செய்தார்கள், கர்த்தர் அவர்களை இரட்சித்து அவர்களைத் தம்முடைய சபையில் சேர்த்துக்கொண்டார் (அப்.2:47). எனவே, ஒருவன் இரட்சிக்கப்பட விரும்பினால் அவன் விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும், இதை அவன் செய்வதன் மூலம், அவன் கிறிஸ்துவின் இரத்தத்தினிடத்தில் சேர்ந்து அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

4. கர்த்தருடைய சபை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிரயத்துக்குக்கொள்ளப்பட்டது. ஆனபடியினால், இது இரத்தக்கிரயமானதும், மிகவும் முக்கியமானதுமாகும். நாம் கர்த்தருக்குச் சொந்தமாகும்படிக்குக் கட்டாயமாக அதனுடைய அங்கத்தினராயிருக்க வேண்டும்.

5. கிறிஸ்துவின் ஒளியில் ஒருவன் நடக்கையில் அல்லது அவருடைய சித்தத்தின்படி, அதாவது அவருக்கு உண்மையாக இருக்கின்ற போது கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவனைக் கழுவுகிறது.

6. கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளும்படி வாரத்தின் முதல் நாள் தோறும் கூடி, கிறிஸ்துவின் சரீரத்தையும், அவருடைய இரத்தத்திற்கு மாதிரியாக வைக்கப்பட்டுள்ள திராட்சபழரசத்தையும் நினைவு கூரவேண்டும். இது நாம் இரட்சிக்கப்படும்படிக்கு கிறிஸ்துவின் தியாகத்தை நினைவுகூர நமக்கு உதவுகிறது.

என்னுடைய நண்பரே, கிறிஸ்து உனக்காக மரித்தார். உன்னுடைய பாவங்கள் மன்னிப்பப்படும்படிக்கு அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தினார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? நீங்கள்

இவ்வாறில்லாவிட்டால், இதை நீங்கள் செய்யும்படிக்கு உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம். உங்களுக்காக கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிற இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளத் தவறும் போது எவ்வளவு வெட்கமாயிருக்கும்!

***சபை*.........கிறிஸ்துவின் மணவாட்டி**
**நம்முடைய கர்த்தர் பல மனைவிகளையுடைய**
**ஒரு இருதார புருஷர் அல்ல.**
"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்;
அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து..." (எபே.5:25)

***சபை*.........கிறிஸ்துவின் சரீரம்.**
**நம்முடைய கர்த்தர் ஒரு தலையையும், பல சரீரங்களையும்**
**கொண்ட ஒரு அசாதாரணப் பிறவி அல்ல.**
"அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்;
எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும்
மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ.1:18).

***சபை*..........கிறிஸ்துவின் ராஜ்யம். அவருடைய**
**பிரஜைகள் அனைவரும் ஒரே ராஜ்யத்தில் உள்ளனர்.**
"..........என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின்
வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்
தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோ
கத்திலே நீ கட்டுகிறது எதுவோ, அது பரலோகத்திலும்
கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது
எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டி
ருக்கும் என்றார்: (மத்.16:18,19; கொலோ1:13).

***சபை*..............கிறிஸ்துவின் குடும்பம். அது அவருடைய நாமத்தைத் தரிக்கிறது, அவருடைய ஜனங்கள் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.**
"இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு......" (எபே.3:14,5 ; ரோம.16:16; அப்.2:47).

***சபை*.............அவருடைய இரத்தத்தினால் வாங்கப்பட்டது. அதில் நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா?**
எபே.5:25,26; 1பேது.1:18,19; எபி.13:8; கொலோ.1:19–24; கலா.3:26,27.

**-The Voice of Truth International**

# தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்
# Grieve not the Holy Spirit of God



*-Glory Arjunan*

புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்க விருக்கும் அன்பு சகோதரிகளே, உங்கள் யாவருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக!

நீங்கள் எந்த வகையில் தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறீர்கள்? நோவா காலத்து ஜனங்கள் செய்த காரியம் கர்த்தருக்கு மனஸ்தாபத்தை ஏற்படுத்தினது என்று ஆதி.6:6-ம் வசனத்தில் படிக்கின்றோம். இக்கடைசி நாட்களில் மாம்ச ஜீவியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தேவனுடைய வசனத்தை அசட்டை செய்து கொண்டு, தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்திக்கொண்டு வருகின்ற அநேகரை பார்க்கிறோம் மற்றும் கேள்விப்படுகிறோம்.நமது மாம்சபலத்தினாலும் அல்ல, நமது பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவனுடைய பலத்தினால் வருகின்ற புத்தாண்டினை துவக்குவோம். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற அநேகர் கிறிஸ்துவின் ஆவியில்லாதவர்களாக, மாம்சத்துக்குரியவைகளையே சிந்தித்து சமாதானத்தை இழந்து, துக்கத்துடனே ஒவ்வொரு வினாடியையும் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். "...என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும பயப்படாமலும இருப்பதாக" (யோவா 14:27) என்று இயேசு சொன்னார். "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோ.8:8) அன்பு சகோதரியே, உங்களை சற்று நிதானித்துப்பாருங்கள். உங்களுக்குள் லௌகீகக் கவலை தொடர்ந்து உங்களை அழுத்திக் கொண்டிருக்குமானால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிருக்கிறீர்கள் என்று தான் பொருள். உங்கள் "மனோ துக்கத்தினாலே ஆவி முறிந்துபோம்" (நீதி.15:13). நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். சதா பூமிக்குரிய காரியங்களையே நினைத்து துக்கப்பட்டுக் கொண்டிருக்க நாம்

பூமிக்குரியவர்களல்ல, ஒரு நாளில் இப்பூமியிலிருந்து மீட்கப்பட்டு தேவனோடு என்றென்றுமாய் வாழப்போகிறவர்கள். "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற **தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்**" என்று எபே.4:30-ல் வாசிக்கிறோம்.

இன்று கிறிஸ்தவர்களில் அநேகர், நாங்கள் ஆவிக்குரியவர்கள் என்று சொல்லிக்கொண்டு கிறிஸ்துவுக்கும் தங்களுக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமில்லாதவர்களாய் உலகத்திற்கு ஒத்த வேஷம் தரித்துக்கொண்டு திரிகின்றனர். "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் உங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" (1கொரி.2:12) என்று பவுல் கூறுகிறார். இங்கே பவுல் கூறுகிறதைப் போல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுததி காண்பிப்போம். ஆனால் கிறிஸ்தவ சமுதாயத்தில் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி காண்பிப்பதைக் காணமுடிவதில்லை. கிறிஸ்தவ நிகழ்ச்சிகளையும், பாடல்களையும் பார்க்கலாம் என சில டிவி சேனல்களைத் திருப்பினால், அப்பப்பா! கண் கொண்டு பார்க்கமுடிவதில்லை, பாடல்களில் வரிக்கொரு ஆடையும், அலங்காரமுமாக பக்திக்குரிய ஸ்திரீகள் எனச் சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகள் சினிமா நடிகைகளையும் மிஞ்சி காலத்துக்கேற்றாற் போல் வேஷமாகக் காட்சியளிக்கின்றனர். இது ஆவிக்குரிவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்துகிறதாய் இருக்கிறதா? வேதாகமம் சங்கீதம், கீர்த்தனைகள், ஸ்தோத்திரப் பாடல்களைக் குறித்துப் பேசும்போது, "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி .....எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" (எபே.5:19,20) என எவ்வளவு அழகாக எழுதப்பட்டுள்ளது! மேலும் கெலோ.3:16-ல் "...உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி என்றுள்ளது. அன்பு சகோதரிகளே, நாம் நம்முடைய கர்த்தரை நம் இருதயத்திலே பக்தியுடன் பாடுகிறோமா? அல்லது பிறர் கண்டு நம்மைப் புகழ வேண்டுமென்பதற்காக டூயட் பாடல் பாடுவதுபோல் பாடுகின்றோமா? நம்மை நாமே நிதானித்துப் பார்ப்போம். **தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருப்போம்.**

பவுல் தீமோத்தேயுக்கு எழுதின நிருபத்தில் ஸ்திரீகளுக்கென்று சில ஆலோசனைகளைக் கொடுக்கிறார்; " ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும்,

நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்" (1தீமோ.2:10,11) என்கிறார். நற்கிரியை என்பது என்ன? ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தாமலும், நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாகவும், சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியையுடைவர் களாகவும் (1பேது.3:3,4), புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து, தங்களை அலங்கரிக்கிறவர்களாயுமிருக்க வேண்டும். இப்படிப்பட்ட நற்கிரியைகளினால் நம்மை அலங்கரித்துக் கொள்ளும்போது நமக்குள்ளிருக்கும் தேவனுடைய ஆவியானவர் நம்மில் மகிமைப்படுவார். நாமும் தேவனுடைய பிள்ளைகளாயிருப்போம். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோம.8:16). பாருங்கள் எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! **இப்படிச்செய்தால் நாமும் தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருப்போம்.**

"...ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக் கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (ரோம.8:26). பார்த்தீர்களா? நமது பலவீனங்களை அறிந்த பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதலும் செய்கிறார்! ஆவிக்குரியவர்களாகிய நாம் இன்னும் சொல்லிமுடியாத ஆசீர்வாதங்களைப் பெற பாத்திரவான்களாயிருக்கிறோம். தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் நம்மை போதித்து, சகல சத்தியத்திற்குள் வழி நடத்துகிறவராயிருக்கிறார்.

"தேவன்" நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2தீமோ.1:7). இப்படியிருக்க மனக்கிளச்சிக்கும், உணர்ச்சிகளுக்கும் இடங்கொடுத்து நாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள் என்று சொல்லிக்கொண்டு உலகத்திற்கொத்த வேஷம் தரித்துக் கொண்டு, பொய்சொல்லிதிரிகிறவர்களாயிருப்பீர்களானால் உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாய் காணப்படுவீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸிதுவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" (2யோவா.9). "குமாரனை (கிறிஸ்துவை) உடையவன் ஜீவனை உடையவன்". "கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு" (2கொரி.3:17). உலகப்பிரகாரமான சகலவற்றிலிருந்தும் கர்த்தா உங்கலை விடுதலை செய்து, விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்ததோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக!

# வாக்கிங் போகும்போது....

இம் மாதம் 3-ம்தேதி நான் வாக்கிங் போய்க் கொண்டிருந்தபோது நமது மாத இதழைக்குறித்து சிந்தித்துக்கொண்டு நடந்தேன். பொதுவாக நான் உட்காரும் போதும், நடக்கும்போதும், படுத்துக்கொள்ளும் போதும், எழுந்திருக்கும்போதும் இவைகளைக்குறித்தே நான் அதிகமாக யோசிப்பதுண்டு 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை தாங்குகிறவர்கள் இன்னும் அதிகமாக எழும்பினால் நலமாக இருக்கும். இன்னும் அநேகருக்கு இவ்விதழை அனுப்ப வசதியாக இருக்குமே என சிந்தித்துக்கொண்டு நடக்கும்போது கடந்த மாதம் நமது மாதஇதழை கேட்டுப் பெற்றுக்கொண்ட அன்பின் சகோதரர் எல்வுட் இன்பராஜ் அவர்கள் இவ்வுழியத்தை தாங்கும்படியாக ஆயத்தமாக ஒரு கவரில் 'The Word of Christ' பத்திரிக்கை ஊழியத்திற்காக என எழுதிவைத்திருந்த கவரைக் கொடுத்தார்கள். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இதை குறித்து நினைத்த சில வினாடிகளில் கர்த்தர் பத்திரிகையின் தேவையில் ஒரு பகுதியை சந்தித்தார்.

2500 வசகர்கள் நமது மாத இதழை பெற்று பயனடைந்து வருகிறார்கள். அதில் அநேகர் மாதந்தோறும் உதவி செய்து வருகிறார்கள்.



கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கவும் சத்தியபாதையில் நடத்தவும் அவர்களுக்காக ஜெபித்து வருகிறோம். சத்தியம் தொடந்து நம் தேசத்தில் விதைக்கப்பட இவ்வுழியத்தைத் தாங்குங்கள். மற்றவர்களுக்கும் படிக்க கொடுத்து உதவிடுங்கள்.

***கிறிஸ்துவின் வசனம்,***
***ஆசிரியர்***

## இரட்சிப்பின் திட்டம்
## Plan of Salvation

சுவிசேஷத்தைக் கேள்விப்படுதல் - ரோ.10:17: 10:14. யாக்.1:19. எபே.1:13. கொலோ.1:6

Here the gospel - Rom.10:17;10:14;Jam.1:19; Eph.1:13; Col.1:6

விசுவாசம் - மாற்.16:16. ரோம.10:10. 1பேது.2:6. அப்.16:31:10:43

Faith - Mar.16:16;Rom.10:10:1Pet.2:6; Act.16:31; Act.10:43

மனந்திரும்புதல் - அப்.2:38, லூக்.13:3;24:47. மத்.4:17. அப்.11:18


Repentance - Act.2:38; Luk.13:3; 24:47; Matt.4:17; Act.11:18

அறிக்கையிடுதல் - ரோ.10:10. அப்.8:37. மத்.10:32

Confess - Rom.10:10; Act.8:37; Matt.10:32

ஞானஸ்நானம் - மாற்.16:16. அப்.2:41:8:12

Baptism - Mar.16:16; Act.2:41; 8:12



கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் - அப்.2:47

The Lord added to the church - Act.2:47

பகுதி - 1 - UNIT

# சிறுவர்களுக்காக...

## Especially For Kids



★ தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை - லூக்கா 1:37

For with God nothing shall be impossible - Luke 1:37

★ இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் - எபிரெயர் 13:8

Jesus Christ the same yesterday, and today, and forever - Hebrews 13:8

★ பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது - கொலோசெயர் 3:20

Children, obey your parents in all things for this well pleasing unto the Lord - Colossians 3:20

★ கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது - பிலிப்பியர் 2:5

Let this mind be in you, which was also in Christ Jesus - Philippians 2:5

★ மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? - மாற்கு 8:37

What shall a man give in exchange for his soul? - Mark 8:37

### கேள்வி - Question

1. எத்தனை அப்போஸ்தலர்கள்? அ)10 ஆ)12 இ)40

How many apostles were there? A)10 B)12 C)40

2. முதல் மனிதனின் பெயர் என்ன? அ)ஆதாம் ஆ)பவுல் இ)ஏனோக்

What is the Name of the first men? A)Adam B)Paul C)Enoch

3. வேதாகமத்தில் எத்தனை புத்தகங்கள்? அ)80 ஆ)106 இ)66

How many books are there in the Bible? A)80 B)106 C)66

4. இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது யார்? அ)ஸ்தேவான் ஆ) யோவாஸ்நானன் இ)ஏசாயா

Who gave baptism to Jesus? A)Stepen B)John the Baptist C)Peter

5. வேதாகமத்தில் சிறிய வசனம் எது? அ)யோவான் 6:48 ஆ)யோவான் 11:35 இ)1தெசலோனிக்கேயர் 5:17

Which is the smallest verse in the Bible? A)John 6:48 B)John 11:35 C)1Thessalonians 5:17

Hello Kids, Hurry up! Join!! Participate!!! Memorize the Bible verses. Win your gifts

### CHORUS

நேற்றும் இன்றும் என்றும் மாறா, இயேசு இரட்சகர்
எல்லாம் மாறினும் இயேசு மாறார், மகிமை அவர்க்கே
மகிமை அவர்க்கே! மகிமை அவர்க்கே!
எல்லாம் மாறினும் இயேசு மாறார்...
மகிமை அவர்க்கே !


Yesterday today For ever Jesus is the same
All may change but Jesus never, Glory to His Name
Glory to His Name ! Glory to His Name !
All may change but Jesus never...
Glory to His Name !

ஹலோ பிள்ளைகளே, சீக்கிரம்! இணைந்து கொள்ளுங்கள்!! பங்குகொள்ளுங்கள்!!! வேதவசனங்களை மனனம் செய்யுங்கள். உங்கள் பரிசை வெல்லுங்கள்.

# பரலோகத்தில் பிரவேசிக்க, அதை காணா தடை செய்யும் கிறிஸ்மஸ் பண்டிகை

*John S.Nathan*

இயேசுவின் தொடக்க கால ஊழியத்தின்போது யூதர்கள் தொடர்ந்து **1. பஸ்கா பண்டிகை லூக்.2:41 2. புளிப்பில்லாத அப்பப்பண்டிகை மத்.26:17-19 3. பெந்தெகொஸ்தே பண்டிகை அப்.2:1; 20:16 மற்றும் 4. கூடாரப்பண்டிகை யோவா.7:2.** வருடப்பிறப்புகளையும் மாதப்பிறப்புகளையும் கொண்டாடினர் (கொலோ2:16). இப்பண்டிகைகளெல்லாம் வரப்போகிற கிறிஸ்துவைப் பற்றினது என பவுலடியார் கூறுகிறார் (வசனம்17). கிறிஸ்து இயேசுவும் பல யூதபண்டிகைகளை (யூத நியாயப்பிரமானத்தின் கீழ் வாழ்ந்ததால்)



கடைபிடித்தார். (யோவா.4:45; 5:1; 6:4; 12:12). சிலுவையில் மரிப்பதற்கு முன்பாக பஸ்காபண்டிகைக்கு ஒரு புதிய அர்த்தத்தை பிட்கப்படப்போகிற தமது சரீரத்தையும், சிந்தப்படபோகிற தமது விலையேறப்பெற்ற இரத்தத்தையும் நாம் நினைவு கூரும்படியாக புதிய ஏற்பாட்டை, உடன்படிக்கையை அன்பின் ஐக்கியத்தை, எளியமுறையில் அவர்களுக்கு போதிக்கவும், அவர் திரும்ப வருமவரைக்கும் அதனை அனைவரும் கடைபிடிக்க கட்டளை இட்டார். இதனை வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய நாளிலே (வெளி.1:10 அப்.20:8) கடைபிடித்தனர். உண்மை என்னவென்றால் இயேசுவின் சீடர்களோ, புதிய ஏற்பாட்டு வேதாகமத்தில் "கிறிஸ்மஸ்" கொண்டாடினார்கள் என்றோ, கொண்டாடப்பட வேண்டுமென்றோ எங்கும் பேச வில்லை, கட்டளை இடப்படவுமில்லை. ஏனெனில் இயேசுகிறிஸ்து இதனை வெறுத்தார். இதற்கு நிழலாட்டமாக "...உங்கள் மாதப்பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது. அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது. அவைகளைச் சுமந்து இளைத்துப்போனேன்" (ஏசா.1:14). மேலே கூறிய பண்டிகைகளை விட மிகச்சிறப்பான ஒன்றை, நிலையான நித்திய வாழ்வை இப்பூவுலகில் வழங்கியும், மறுமையில் பரலோக வாழ்வை, மரணமில்லா மகிழ்ச்சியான வாழ்வை அனைவருக்கும் அளிக்கும் உன்னதமானது "....நம்முடைய பஸ்காவாகிய "கிறிஸ்து" நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே" என்றார் பவுல் 1கொரி.5:7.

இன்று நம்மிடையே காணப்படும் மாபெரும் தவறுகள் என்னவென்றால் வேதாகமம் கூறிய கட்டளைகளை கைக்கொள்ளாமல் தேவன் கூறியவைகளை செய்யாமல், மனித ஆலோசனைபடி, பாரம்பரியத்தின் கிறிஸ்தவர்களாக வாழ விரும்புகிறோம். வாழுகிறோம்.

மோசே கூறியது: நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம். அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் உபா.4:2. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது சங்.19:2. "அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் (குறைத்தால்) அவர் உன்னைக் கடிந்துகொள்வார்" (நீதி.30:6).

"...ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவர்கள் மேல் கூட்டுவார்" ஒருவன் இந்தத்தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவ புத்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலிருந்தும் (பரலோகம்) இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்" (வெளி.22:18,19). எனவே இவ்வுலகில் வாழும் போப்பாயிருந்தாலும், மதவட்டாரத்தில் பெரிய பெரிய பதவியில் இருந்தாலும் மற்றயாராக இருந்தாலும வேதாகமம் கூறியதை செய்யாமற்போனால், அதாவது 1. கர்த்தருடைய பந்தியை சரியாக புரிந்து அதன்படி நடத்தாமல், நடக்காமல் இருப்பவர்கள். 2. கிறிஸ்மஸ் கொண்டாடக்கூடியவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் செய்கை சரி (Right) அல்ல. அது (Wrong) தவறு என்பதோடல்லாமல் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை மத்.7:21. நிக்கொதேமு எவ்வளவு நல்லவன் என்பதை இயேசு அறிந்திருந்தபோதும் அவன் பரலோகம் போக வேண்டுமானால் அவர் கூறிய ஆலோசனைகளை செய்திருப்பான். அவன் அவரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தான்! இல்லையேல் பரலோகத்தை காண, பிரவேசிக்க முடியாதே! ஆகையால் வேதாகமத்திற்கு எதிராக வாழ்பவர்கள் எத்தனை பெரியவர்களாக இருப்பினும் அவர்களை பரலோகத்தில் காணமுடியாது. பிரவேசிக்க முடியாதே! வேதாகமம் கூறுவதை மாத்திரம் செய்வோம்! எல்லோரும் பரலோகம் போக போதிப்போம்!

★ கிறிஸ்துவின் வசன மாத இதழ் உங்களுக்கு தேவையானால் உடனே ஒரு அஞ்சல் அட்டையில் உங்களுடைய தெளிவான முகவரியை ஆங்கிலத்தில் எழுதி கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

★ The world Evangelism கொடைக்கானலில் நடத்தும் Retreat -ல் கலந்து கொள்ள விருப்பமானால், இன்றே உங்களுடைய பெயரை கீழ்க்காணும் முகவரியில் பதிவு செய்து கொள்ளுங்கள். தேதி பின்பு அறிவிக்கப்படும்.

**THE WORD OF CHRIST**
**P.O.BOX 5, Batlagundu 624 204, S.INDIA**


## வேத அறிவுப்போட்டி எண் 111 -ல் வெற்றிபெற்றவர்கள்

S. பாக்கியராஜ் -திண்டுக்கல்
V.F. ஷர்லோ -பாண்டி
Mrs. மெர்ஸி டக்லஸ் -கோவை
Tmt. மரகதம் திரவியம்-கோம்பை
A. ஆனந்த் -மதுரை
Mrs. மெல்சிடா -திண்டுக்கல்
V. கோவலன் -மதுரை
J. ரூத் எபிநேசர் -சிலுவத்தூர்
S.R .பெரியசாமி -சேலூர்
N. ஜான் செல்லையா-நியூஎல்லீஸ்நகர்
J. நிர்மலா ஜான் -மதுரை
R. அருண்குமார் -சென்னிமலை
R. பவுல் சாமுவேல் -சென்னிமலை
R. சரோஜா -திருநெல்வேலி
Sis. குளோரி பவுல்சர் -சென்னை
Mr. இவான் வெண்டில் பாண்டியன் - மறவமங்கலம்
Mr. ஜெபெகர்சன் எட்பெர்க் பாண்டியன் மறவமங்கலம்
C. ஜாய் கிறிஸ்டினா -நாகமலை
E. ஜோசப் தேவதாஸ் -நாகமலை

## வேத அறிவுப்போட்டி எண் 111 -ன் விடைகள்

1. 70 பேர் -நியா.8:30
2. தெசலோனிக்கேயர் சபை -2தெச.3:6
3. லேவி -யோசு.13:33
4. 60 -1தீமோ.5:9
5. தேவனால் -உபா.21:22
6. சுவிசேஷத்தினாலே -2தீமோ.1:10
7. பிலேயாம் -எண்.23:8
8. தீத்துவுக்கு -தீத்.2:15
9. குத்திக்கொள்ளாமலும் - லேவி.19:28
10. ஆர் -பிலே.24

## பொது அறிவுச் சோதனை



1. பகலும் இரவும் சம அளவில் நீடித்திருக்கும் இடம் எது?
அ)துருவம் ஆ)வெப்ப பிரதேசம் இ)பூமத்தியரேகை
2. உலக அமைதிக்காக முதன்முதலில் நோபல் பரிசு பெற்றவர் யார்?
அ)ரூஸ்வெல்ட் ஆ)ஆங் சான் சூகி இ)பெர்த்தா வான் சாட்னா
3. முதன்முதலாக பஞ்சாயத் ராஜை அமல்படுத்திய மாநிலம் எது?
அ)பஞ்சாப் ஆ)ஹரியானா இ)ராஜஸ்தான்
4. தொண்டைப்புண் எந்த கிருமியினால் ஏற்படுகிறது?
அ)ஸ்ட்ரெப் டோகாக்கஸ் ஆ)மைகோ பாக்டீரியா இ)சால்மோனல்லா
5. இந்திய அணுசக்தி திட்டத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
அ)எஸ். என். போஸ் ஆ)சி. எஸ். சந்திரசேகர் இ)எச். ஜே. பாபா

விடைகள்:
1.பூமத்திய ரேகை
2.ரூஸ்வெல்ட்
3.ராஜஸ்தான்
4.ஸ்ட்ரெப்டோ காக்கஸ்
5.எச். ஜே. பாபா

## ஜெபியுங்கள்



- இவ்வருடம் முழுவதும் தேவன் நம்மைக் காத்தபடியால்...
- வருகின்ற புத்தாண்டை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாகவும். விசுவாசிகள் யாவரும் புதுபெலனை பெறும்படியாகவும்...
- வானொலி தொலைக்காட்சி ஊழியங்களை கர்த்தர் தொடர்ந்து ஆசீர்வதிக்கும்படியாகவும்...
- உலக அளவில் உள்ள கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்காகவும்...
- உலக நாடுகளின் சமாதானத்திற்காகவும்...

சிறுவர் பகுதி

# அப்பம் புசித்துத் திருப்தியானதினாலே என்னைத் தேடுகிறீர்கள்

***வேதவாசிப்பு: யோவான்6:24-29***



ஒரு முறை ஜனங்கள் இயேசுவைத்தேடி வந்தார்கள். அப்பொழுது கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: மிகுந்த கரிசனையோடே அவரை விசாரிப்பதுபோல ரபீ, நீர் எப்பொழுது இங்கே வந்தீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர் என்னசொன்னார் தெரியுமா? நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அன்றைய நாட்களில் இயேசு ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் ஐயாயிரம் பேருக்கு கொடுத்து போஷித்ததைக் கண்ட ஜனங்கள், மீண்டும் அப்பத்தை கொடுப்பார் என்று அவரை நாட ஆரம்பித்தனர். இன்றைய நாட்களிலும் உணவுக்காக இயேசுவை பின்பற்றுகிறவர்களைப் பார்க்கிறோம். மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று நம் ஆண்டவர் சொன்ன வார்த்தையை அநேகர் நம்பாமற்போகிறார்கள்.

ஆகையால் தான் இயேசு அவர்களைப்பார்த்து அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார். அப்படியானால், நாங்கள் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். அதற்கு இயேசு: தேவனை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

இன்றைக்கு தேவனை நீங்கள் முதலாவது நம்பவேண்டும். அவரால் எல்லாம் கூடும் என்று விசுவாசிக்கவேண்டும். இதுதான் கிரியையுள்ள விசுவாசம். உணவு நம் எல்லோருக்கும் தேவை என்பதை நம் பரம பிதாவாகிய தேவன் அறிந்திருக்கிறார். இந்த உணவு நாம் சரீரத்தில் இருக்கும்வரை நமக்குத் தேவை. ஆனால் நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்ககூடிய போஜனம், அவருடைய வசனமே. அதற்கேற்ப கிரியை நடப்பிக்கவேண்டும். நடப்பிப்பீர்களா!

**மனப்பாட வசனம்:**

"அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்" (யோவா.6:27).

# வேத அறிவுப் போட்டி எண்.112

பாட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா பால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி னுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் லந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக ழுதவும்.

நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு எப்படிப்பட்ட சம்பத்தாயிருப்பீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் ?

இயேசு பூமியிலே இருப்பாரானால் யாராயிருக்கமாட்டார் ?

எகிப்துக்குப்போன யாக்கோபின் குடும்பத்தார் எத்தனைபேர் ?

நியாயத்தீர்ப்புக்கு முன்பாக எது மேன்மை பாராட்டும் ?

எவர்கள் துன்மார்க்கத்தின் எல்லையென்றும், கர்த்தர் என்றைக்கும் சினம் வைக்கிற ஜனமென்றும் சொல்லப்படுவார்கள் ?


இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்று எந்த அப்போஸ்தலன் எழுதுகிறார் ?

எந்தப் பட்டணம் தனக்கு அரணைக்கட்டி, தூளைப்போல் வெள்ளியையும், வீதிகளின் சேற்றைப்போல் பசும்பொன்னையும் சேர்த்து வைத்தது ?

மரித்தோரானவர்கள், மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் எது அறிவிக்கப்பட்டது ?

கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்கு என்னபண்ணுவேன் என்று கூஷின் குமாரன் மூலம் சொல்லியிருந்தார் ?

0. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் யாருடைய அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் ?

**Bro.FERNANDAS**, Evangelist, Mobile: 97883 19730
Church of Christ, Veppillaipatty,
Kethureddiapatty - 635 302,
**DHARMAPURI DISTRICT, S.INDIA.**
Sunday Worship : 10.00 a.m. Wednesday Bible study: 5.00 p.m.



Owned and published by B. Arjunan from 17.2.102
D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed
by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Dec.2009.



PREACHERS' FAMILY FELLOWSHIP MEETING - MAY 2009 at KODAIKANAL

## உங்கள் வானொலியில்

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

## உங்கள் தொலைக்காட்சியில்

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**IMAYAM TV**
EVERY Wednesday 6.30 - 6.45 a.m

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
**17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,**
**DINDIGUL DISTRICT, S.INDIA.**
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in
Website: www.thewordofchristindia.com

***Postal Address:***
**THE WORD OF CHRIST**
**POST BOX No. 5**
**BATLAGUNDU - 624202**
**S.INDIA**